தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.24347590

**ஆணை நாள் 03.11.2020**

**முன்னிலை**

**திரு.ச.செல்வராஜ்,எம்.ஏ.,பி.எட்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 8294/E/2019**

திரு.S.ஜனார்தனன் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம், .. பொது அதிகார அமைப்பு
அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.

******

## ஆணை

மேல்முறையீட்டாளர் 14.05.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் அருப்புக்கோட்டை வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், தான் பட்டா மாறு-தல் கோரி அளித்த மனு 05.12.2018 கிடைக்கப் பெற்ற தேதி, அதற்கான கோப்பு எண், புதிய பட்டா/பட்டா திருத்த மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய காலக் கெடு குறித்த விதிகளின் நகல், தன் மனுவின் தற்போதைய நிலை, மேல்முறையீட்டு அலுவலரின் விபரம் ஆகியவற்றை 5 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார். தகவல் கிடைக்கப் பெறாத காரணத்தால், மேல்முறையீட்டாளர் 21.06.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான மனுவை முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 14.06.2019 தேதியிட்ட கடிதத்தில் வழங்கியுள்ள தகவல்கள் உரிய தகவல்கள் இல்லை என்று தெரிவித்து 20.08.2019 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்தில் தாக்கல் செய்துள்ளார்.

2. அந்த மனு தமிழ்நாடு தகவல் ஆணையத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வரப்பெற்ற தேதியின் அடிப்படையில் காலவரிசை பட்டியலிடப்பட்டு விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் விருதுநகர் மாவட்டத்தில் பல மாதங்கள் ஆகியும்

முழுமையான தகவல் வழங்கப்படாத மேல்முறையீட்டாளர்களின் நிலுவை மனுக்களின் மீது மாநில தகவல் ஆணையர் அவர்கள், விருதுநகர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களுடன் 29.09.2020 அன்று தொலைபேசி மூலம் விவாதிக்கப்பட இருந்த நிலையில், அருப்புக்கோட்டை வட்டாட்சியர் அலுவலக பொதுத் தகவல் அலுவலர் 15.09.2020 தேதியிட்டு இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள கடிதத்தில், மேல்முறையீட்டாளருக்கு 03.10.2019 அன்று உரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அவர் கோரியவாறு பட்டா திருத்தம் செய்தி 01.10.2019 அன்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும், மீண்டும் இது குறித்த தகவல்கள் 08.09.2020 அன்று பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டு அவர் பெற்றுக் கொண்டதாகவும் தெரிவித்து, மேல்முறையீட்டாளர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இணைத்து அனுப்பி வைத்துள்ளார்.

3. ஆகவே பொதுத் தகவல் அலுவலர் அவர்களால் வழங்கப்பட்ட தகவல் திருப்திகரமானதாக இல்லையெனில், அது குறித்து இவ்வாணை கிடைக்கப் பெற்ற 30 தினங்களுக்குள், தனது கைபேசி எண்ணுடன், இவ்வாணையத்திற்கு தெரிவிக்குமாறு மேல்முறையீட்டாளருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

**ஒம்/-.ச.செல்வராஜ்,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 8294/E/2019**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்
வட்டாட்சியர் அலுவலகம்,
அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம்.

திரு.S.ஜனார்தனன்
5/25/3 E.B. காலனி, காமராஜ் நகர்,
அருப்புக்கோட்டை,
விருதுநகர் மாவட்டம்.

Copy to: File
RJ/PS 06.11.2020